


மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 2


- அவர் உன் உயிர்காப்பவர்
- தாவீதுடன் உடன்படிக்கை
- வேதாகம சத்தியத்திற்கான ஆதாரம்

  பாபிலோனிய சிறையிருப்பு
- அந்நியன்
- சீரியனாகிய நாகமானின் அறிக்கையுஹம் குணமாகுதலும்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களியிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூற வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிக்கையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிக்கையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# அவர் உன் உயிர் காப்பவர்

உலகில் மற்றெந்த இடத்தையும் விட ஆஸ்திரேலியாவில்தான் உன்னைக் கொல்லக் கூடிய அநேக காரியங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது.

இக்கண்டத்தில் தான் உலகின் மிகவும் விஷம் பொருந்திய பாம்புகள் பத்து உள்ளன. அதோடு மரணத்தை மனிதருக்கு உண்டாக்கக் கூடிய ஜெல்லி மீன் வகைகள் 5 கூட இங்கு தான் உள்ளன. சுறாமீன்களும் முதலைகளும் கடலில் உள்ளன. இவைகளின் வாய்களுக்குத் தப்பினாலும், கடல் உன்னை விழுங்கலாம். ஏனெனில் கடலில் சில பகுதிகளில் உள்ள நாம் எதிர்க்க முடியாத சுழல்கள் உள்ளன. அவை கடற்கரையினின்று வெகு தொலைவிற்கு இழுத்துச் செல்லக்கூடும்.

இத்தனை ஆபத்துக்கள் இருந்தாலும் நீச்சல்காரர்களுக்கும் அலைப்பலகையில் கடலில் பொழுதுபோக்குபவர்களுக்கும் சர்ஃப் செய்பவர்களுக்கும் கடற்கரை ஒரு கவர்ச்சி கரமான இடமாகும். சிட்னியின், ஒரு மைல் நீளமாக தங்க நிற மணலுள்ள போண்டி கடற்கரையைப் பற்றிக் கேட்டிராதவர் வெகு சிலரே. அலைப்பலகையில் கடலில் சர்ஃப் விளையாடுவோரின் பரதீசு அதுதான் என்றாலும், அங்கே சுறாமீன்களும் உண்டு.

### உயிரை வாங்குவது

கடல் மிகவும் பலம் வாய்ந்தது, சில சமயங்களில் அது எப்படி இயங்கும் என முன்னறிவிப்புச் செய்ய முடியாதது. நன்கு பழக்கப்பட்ட நீச்சல்வீரர்களும், அலைப்பலகையில் செல்லும் வீரர்களும் கூட, உடல் வெப்பம் தணிந்து போவது அல்லது எதிர்பாராத விபத்துக்குள்ளாகி, (அலை திரண்டு சிதறுவது, நுரை பொங்குவது) ஆகியவற்றால் நிலை குலைந்து போவார்கள். 1938ல் பெப்ரவரி மாதத்தில் கறுப்பு ஞாயிறு என்றழைக்கப்படும் அந்நாளில் தொடர்ச்சியாய் வந்த பிரமாண்ட அலைகளினால் நூற்றுக்கணக்கான நீச்சல் வீரர்கள் கடலில் வெகுதூரத்திற்கு அடித்துச் செல்லப்பட்டார்கள். அதில் ஐந்து பேர் கடலில் மூழ்கி இறந்து போனார்கள்.

மீட்கப்பட்ட மற்றவர்களில் அநேகர் துன்புற்ற நிலையில் இருந்தார்கள். போண்டி சர்ஃபர்களின் உயிர் காக்கும் குழுவை அந்த நாளுக்கு 31 ஆண்டுகளுக்குமுன் அமைத்தத் தன்னார்வ நீச்சல் வீரர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அக்குழுவின் அங்கத்தினர்களின் புகழ் திடீரென அனைவருக்கும் தெரிந்து, அவர்கள் பாராட்டுப் பெற்றனர். உயிரை வாங்கும் ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றும் மக்கள் எவ்வளவாய் தேவைப்படுகிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள ஒரு கறுப்பு ஞாயிற்றுக்கிழமையின் சோக நிகழ்வு தேவைப்பட்டது.

சராசரியாக, ஒரு வருஷத்தில் ஆஸ்திரேலியாவின் கடற்கரையில் 58 பேர் நீரில் மூழ்கிச் சாகிறார்கள். ஆனால் உயிர் காப்போர் எனும் லைஃப் கார்டுகளின் பணி கடற்கரையிலும், சற்று தள்ளி கடலிலும் இல்லாவிடில் இறப்பு எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். யாராவது மூழ்கும் அபாயத்தில் இருக்கிறார்களா என்று சுற்றிப் சுற்றிப் பார்ப்பதற்கு அவர்கள் வேலை முடிந்து விடுகிறதில்லை; அதற்கு மேலும் செய்கிறார்கள்.

அலைப்படகில் கடலில் பொழுதுபோக்குவோரின் உயிர்காக்கும் ஆஸ்திரேலியா என்பது அந்நாட்டின் மிகப்பெரிய தொண்டு நிறுவனங்களில் ஒன்று. சம்பளம் வாங்கும் உயிர் காப்போரையும், நீந்துவோரையும் சர்ஃபர்களையும் கண்காணிக்கும் தன்னார்வத் தொண்டுகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது இந்நிறுவனம். ஆனால் ஆபத்தான பகுதிகளுக்குச் செல்வதைத் தடை செய்வதோடு பாதுகாப்பான இடங்களில் அடையாளம் வைக்கவும் செய்கிறார்கள். மேலும் ஆபத்தினின்று காப்பதற்கான ஆற்றல்களையும் கற்றுக் கொள்கிறார்கள். பொதுமக்களுக்கு, வரக்கூடிய ஆபத்து மற்றும் சிறந்த நடைமுறைப்

பயிற்சிகளையுக் குறித்து அறிவுறுத்துகிறார்கள்.

**உயிர் (ஜீவன்) கொடுப்பவர்**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மிகவும் நெருக்கமாகப் பின்பற்றியோரில் பலர் மீனவர்களாயிருந்ததால் அவர் அவ்வப்பொழுது கலிலேயாக் கடற்கரைப் பக்கம் சென்றார். ஆகவே படகுகள் அவருக்குப் பரிச்சயமாகயிருந்தன. ஒரு சமயம் அவர் படகிலிருந்து மக்களுக்குப் போதித்தார். மக்கள் கரையோரத்தில் கூடி நின்று அவர் கூறுவதை உன்னிப்பாய்க் கவனித்தனர். ஒரு சமயம் அவர் ஒரு படகில் உறங்கிக்கொண்டிருந்தார்.



அப்பொழுது திடீரென எழும்பிய புயலை அநுபவமிக்க அவரின் நண்பர்களாலும் சமாளிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட அடித்துக்கொண்டு போகும் திடீர் புயல்களுக்குப் பேர் போனது தான் கலிலேயாக் கடல். எல்லாருமே தாங்கள் மூழ்கிவிடப் போகிறதாக நினைத்து, தங்களின் நிர்ப்பந்த நிலையில் இயேசுவை எழுப்பி, சற்றுத் தீவிரமாகச் சாவது போல் கதறினார்கள்.

அவர்கள் அவரை எழுப்பி : போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்கு கவலையில்லையா என்றார்கள். (மாற்கு 4:38) அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதிருந்தது. இயேசுவின் வாழ்க்கை முழுவதுமே, தேவனுடைய பராமரிப்பைக் காண்பிப்பதாயிருந்தது. அழிந்து போகும் ஆண், பெண்களுக்கானத் தமது அக்கரையை திரும்பத் திரும்ப செயற்படுத்திக் காட்டியிருக்கிறார். அதற்காகத் தான் இயேசு பிறந்தார். அதற்காகவே அவர் மரித்தார். மக்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான தருணம் அளிப்பதற்காக அவர் உயிர் காப்பவரும் உயிர் கொடுப்பவருமாக இருந்தார். இப்பொழுதோ 'உமக்குக் கவலையில்லையா ?' எனக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர்களின் நன்றியற்ற தன்மையையோ, புரிந்து கொள்ள முடியாத நிலையையோ பற்றி சொற்பொழிவாற்ற இது நேரமில்லை. இயேசு என்ன செய்தார் என்பதைச் சுவிசேஷம் கூறுகிறது :

அவர் எழுந்து காற்றை அதட்டி, கடலைப் பார்த்து : இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி, ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள் ? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார். அவர்கள் மிகவும் பயந்து, இவர் யாரோ ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்" (மாற்கு 4:39-41)

**அவர் யார்**

புயலில் அலை பொங்கி எழும் கடலில் உள்ள அந்த மீன் பிடி படகில், நீ இருந்தவாறு கட்டாயம் மரணம் நேரிடும் என பயந்திருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை



பண்ணிப்பார். அது ஒரு நெருக்கடியான சூழ்நிலை. அந்த நேரத்தில் உன் தேவை என்னவென்று ஓர் உயிர்க்காப்பான் தேவையென்று நீ நன்கு அறிவாய். அப்பொழுது இரட்சிப்பு மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் வந்தது. உன் 'உயிர் காப்பவர்' புயலை அமைதிப்படுத்தினார். கலங்கிய கடலுக்கு சமாதானம் கொண்டு வந்தார்.

நீங்கள் எப்படி உணர்ந்திருப்பீர்கள் என சற்றே யோசித்துப் பாருங்கள். இதைச் செய்த மனிதன் மீது உங்களின் பாராட்டு மிகவும் அதிகமாகும். அதன்பின் அவர் மீதும் அவர் காட்டிய வல்லமையின் மீதும் உங்கள் பயபக்தியும் வியப்பும் என்றென்றுமாய் மாறாது. அதன் பின் அவருக்காக எதையும் செய்யும் மனம் உங்களுக்கு இருக்கும்.

எதிர்பாராததும் விவரிக்க முடியாததுமான ஆபத்துக்கள் நிறைந்தது நம் உலகம். நியூ ஆர்லியன்ஸ் மற்றும் அமெரிக்காவில் தென் மாகாணங்கள் கத்ரீனா சூறாவளியால் தங்களுக்கு வரப்போகும் அபாயங்களைச் சற்றும் நினைக்கவோ எதிர்ப்பார்க்கவோ இல்லை. பின்னர், அவர்கள் தெரிந்து கொண்டது என்னவெனில், அவர்களை மீட்பவர்கள் தான் தேவை. அதுவும் விரைவில் உடனடியாக. புயலுக்கு பின்னர் அவர்கள் கண்டது பெரிய அழிவு.

**நித்திய ஜீவன்**

நாமெல்லாருமே இரவல் வாங்கிய நேரத்தில் வாழ்கிறோம். எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் கட்டாயம் நடக்கும். ஏனெனில் சீக்கிரத்திலோ காலந்தாழ்த்தியோ, மரணம் நம்மை வாரிக்கொண்டு போய்விடும் அதன்பின் நம் தேவையை உணர நேரமிருக்காது. நமக்குத் தேவன் அளித்திருக்கும் உயிர்காப்பவராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவை என்பதை உணர்ந்துகொள்வதற்கான நேரம் இதுவே. அவர் சொல்வதை நாம் கவனித்துக் போகவேண்டும். அவர் கூறுவதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் என்றென்றுமாய் - ஆம், என்றென்றுமாய் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால், அவர் சொல்வதை நாம் செய்ய வேண்டும்.

இத்தகைய வாழ்க்கையை அவர் ஒருவர் தான் தர முடியும். இயேசு நம்மை நித்திய மரணத்தினின்று இரட்சித்து நித்திய வாழ்வைத் தரமுடியும். நமக்கு எந்த அளவிற்கு அது உண்மையாகத் தேவையோ, அந்த அளவிற்கு அதை நாம் விரும்ப வேண்டும்.

# தாவீதுடன் உடன்படிக்கை

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு : என்று புதிய ஏற்பாடு ஏன் ஆரம்பிக்கிறது ? என்று நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா ? இந்த கட்டுரையில் திரு. டெட்பைர்ட் ஏன் என்று விளக்குகிறார்.

தாவீது யார் ?

தாவீது இயேசு கிறிஸ்துவுக்கு முன் ஆயிரம் ஆண்டிலும், ஆபிரகாமுக்குப் பின் ஆயிரம் ஆண்டிலும் வாழ்ந்தவன். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலுள்ள ஆபிரகாமுக்குப் பின் வாழ்ந்தவர்களின் பெயர்கள் மத்தேயுவின் முதல் வசனத்தில் எழுதப்படவில்லை. இயேசுவின் முன்னோர்களின் பட்டியலிலிருந்து ஆபிரகாமும் தாவீதும் மட்டும் ஏன் இடம் பிடிக்கவேண்டும் ? அவர்களில் காணப்படும் சிறப்புத்தன்மை எது ?

ஆபிரகாமைப் பொருத்தமட்டில் ஏற்கனவே நமக்குப் பதில் தெரிந்திருக்கலாம். தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார் என்று நாம் படித்தோம். அவனுக்குச் சிறப்பான ஒருமகன் பிறப்பான். அவன் மூலமாக பூமியின் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் கவனித்தோம். நீண்டகாலம் சென்று, புதிய ஏற்பாட்டில் பவுல் அந்த உடன்படிக்கை குறித்துப் பேசுகையில், "ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" (கலாத்தியர் 3:8) என்று எழுதுகிறான்.

இந்த சுவிசேஷத்தின் முதல் வசனத்திலேயே, தேவன் தமது விசேஷமான குமாரனாகிய இயேசுவைக் குறித்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிக்கப்பட்ட உடன்படிக்கையை நினைவு படுத்துகிறார். அவர் மூலமாக பூமியில் எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அந்த முந்தின உடன்படிக்கை நிறைவேறுதலின் முதற்கட்டத்தை எட்டியுள்ளது. உலக முழுவதிலுமுள்ள மனுக்குலம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெறும்போது, பாவமன்னிப்பின் ஆசீர்வாதத்தை உறுதி பண்ணுகின்றனர். அந்த உடன்படிக்கை முழுவதுமாக நிறைவேறும்படிக்கு, இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்பிவரும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

## தாவீதுடன் தேவனுடைய உடன்படிக்கை

பின்னே ஏன் தாவீது தேவை? தேவன் தாவீதோடும் ஒரு விசேஷ உடன்படிக்கை பண்ணினார். தாவீது இஸ்ரவேலின் சுற்றுப்புற எதிரிகளை முறியடித்து ஓய்ந்தப் பின், அவன் தேவனுக்கென்று ஒரு தேவாலயத்தைக் கட்டும்படி வாஞ்சித்தான். தங்களது மீட்பரை இஸ்ரவேலர் வணங்கி சேவித்து ஆராதிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். தாவீதின் இந்த விருப்பத்தைக் குறித்து தேவன் மனமகிழ்ந்தார். ஆனாலும், தேவாலயம் கட்டும் பணி தாவீதின் குமாரனான சாலொமோனுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது என்று தேவன் தாவீதிடம் அறிவித்தார்.

தனது மகனிடம் தனது விருப்பமான கிரியை கடத்தப்பட்டு விட்டதே என்று அவன் வருந்தியிருக்கலாம். அப்படி அவன் வருத்தப்பட்டிருந்தாலும், தாவீது நிச்சயமாக அதை வெளியே காட்டி கொள்ளவில்லை. ஏனெனில் தனது மகனாகிய சாலொமோன் எடுக்க வேண்டிய பெரிய பொறுப்புக்கு ஆதரவாக அவன் ஜனங்களிடம் தேவாலயப் பணிக்கான பொருட்களையும் காணிக்கையும் சேகரித்தான்.

பின்வரும் வார்த்தைகள், தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையின் குறிப்பான விவரங்களை 2. சாமுவேல் 7:12-16 மூலம் விவரிக்கின்றன.

"உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்ப பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன். அவன் எனக்குக் குமாரனாயிருப்பான். அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன். உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலினிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன். உன்வீடும் உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசானம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" (2. சாமுவேல் 7:12-16).

## இரண்டு விதமான விளைவுகள்

இந்த வாக்குத்தத்தம் இருவித நோக்கமுடையதாயிருக்கிறது. ஓரளவில் அது சாலொமோனுக்குப் பொருந்தும். ஏனெனில் அவன் எருசேலேமில் கட்டவிருந்த அந்த தேவாலயத்தில் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் காலத்திற்குத் தேவனை ஆராதிக்க வேண்டியிருந்தது. ஆனால் உண்மையில் அந்த வாக்குத்தத்தம் இயேசு கிறிஸ்துவுக்கே பொருந்துகிறது. அதற்குக்காரணம் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியைக் கேட்டு விசுவாசித்து, அவருடைய கற்பனை வழியில் நடக்கப்போகிற தேவனுடைய 'வீட்டார்' முற்றிலும் வேறொருவிதமான தேவாலயமாகிறார்கள்.

ராஜாசனம், சிங்காசனம் போன்றவைகளைக் குறித்த என்றென்றைக்குமுள்ள வாக்குத்தத்தம் இயேசு கிறிஸ்துவுக்கு முழுவதுமாகப் பொருந்துகிறது. தவறுகள்



செய்யும்போது தண்டிப்பது குறித்து எழுதப்பட்டுள்ளது, நிச்சயமாக சாலொமோனுக்குப் பொருந்துமேயன்றி, இயேசு கிறிஸ்துவுக்கு அல்ல.

இந்த உடன்படிக்கையினின்று பலவிதமான சுவாரஸ்யமான உண்மைகள் வெளிப்படுகின்றன. அது தேவனுடைய ஆணையுடன் பிறந்தபடியால் நிச்சயமாய் ஒரு உடன்படிக்கையாக உள்ளது. அதைத் தாவீது தெளிவாக (சங்கீதம் 89:35) எழுதியுள்ளான்.

## உயிர்த்தெழுதல்

தாவீது மரிப்பான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. ஆயினும், அவனுடைய சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று சொல்லப்பட்டது. தான் மரிக்கப்போவதை அறிந்திருந்தும் (சங்கீதம் 49:15) தாவீது மறுபடியும் உயிரோடு எழுப்பப்படுவதை நம்பினான். அதனாலேயே மிகுந்த தைரியத்துடன் கூறினான்.

"தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார்"

## வரப்போகும் ராஜா

அவனுக்குப் பின்னால் பிறக்கப்போகிற ஒரு ராஜா என்றென்றைக்கும் நிலைத்திருப்பார் என்று தாவீதுக்குச் சொல்லப்பட்டது. அந்த முக்கிய வம்சத்தலைவர், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவார். அவர் பிறக்குமுன், அவருடைய தாயாகிய மரியாளிடம் பின்வருமாறு கூறப்பட்டது.

"அவர் பெரியவராயிருப்பார்; உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பவர். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக்கா 1:32,33).

இந்த வார்த்தைகளின் மூலம், தேவன் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் கூறின இரண்டு காரியங்களை மரியாளிடம் உறுதிபடுத்தினார். அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இஸ்ரவேலின் மேல் என்றென்றைக்கும் ராஜாவாக அரசாளுவார், தேவன் அவருக்குப் பிதாவாயிருப்பார்.

## வீட்டைக் கட்டுவார்

தாவீதின் ராஜாவாக ஆளுவது மட்டுமின்றி, அவர் தேவனுடைய வீட்டையும் கட்டுவார். பேதுரு இது குறித்து இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த ஆதிசபைக்கு எழுதுகையில் குறிப்பிடுகிறார்:

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்றப் பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரிய கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1. பேதுரு 2:5).

## பூமியின் மேல் இயேசுராஜா

இயேசு கிறிஸ்து பூமியின் மேல் ராஜாவாகும்படி மீண்டும் வரப்போவது குறித்து வேதாகமம் வேண்டிய அளவு கூறுகிறது. அவர் வரும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

நாம் வெளிப்படுத்தலில் இது சம்பவிக்கும்போது என்ன நடக்கும் என்று வாசிக்கிறோம்.

"அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்ய பாரம் பண்ணுவார்" (11:15).

இயேசு கிறிஸ்து நேரடியாக ஆட்சி செய்யும்போது, இப்பொழுது இருக்கும் நிலைமையை விட மிகவும் உன்னத நிலையை ஜனங்கள் அநுபவிப்பார்கள்.

அங்கு நியாயம் இருக்கும். (சங்கீதம் 72:2,7)

சிறுமைப்பட்டவர்கள் விசாரிக்கப்படுவார்கள். (சங்கீதம் 72:4, 13-14)

மிருகங்கள் ஒருமித்துத் தாபரிக்கும். (ஏசாயா 11:6)

வனாந்தரங்கள் செழிப்பான தோட்டமாகும். (ஏசாயா 55:1)

நோயாளிகள் குணமடைவார்கள். (ஏசாயா 35:5-6)

அற்ப ஆயுசு இல்லாமற் போகும். (ஏசாயா 65:20)

சுருங்கச் சொன்னால், இவையெல்லாவற்றையும் சிறுமைப்பட்டவர்கள் ஆசித்தும் அடையாமலும் அனுபவிக்க முடியாமலும் இருந்தவைகளாகும். அவைகள் இயேசு கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் உண்மையில் அனுபவிக்கக் கூடியவைகளாக மாறும்.

**பிறருடன் ஆட்சி**

ராஜா தனிமையாக ஆட்சி செய்யப் போவதில்லை. தானியேல் கூறுகிறான். “வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்யராஜ்யம். சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்” (தானியேல் 7:27).

அது வெளிப்படுத்தலில் உறுதிப்படுத்தப்பட்டு, உண்மையுள்ளவர்கள் உயிர்த்தெழுந்து ‘‘அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்’’ (20:6) என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது. எனவே, நம்மைப் போன்ற மனிதர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் வசிப்பார்கள். அரசாங்கம், கல்விமுறை, சட்ட ஒழுங்கு, எல்லாமே நித்திய ஜீவிகளான பரிசுத்தர் கையில் இருக்கும். அவர்கள் நியாயத் தீர்ப்பில் நித்திய ஜீவனை அடைந்தவர்கள். அவர்களுக்கு இயேசு கிறிஸ்து ராஜாவாக இருப்பார். அந்த சமயத்தில் சமாதானமும் மனநிம்மதியும் இருக்கும். உலகில் எங்குமே யுத்தம் நடவாது. இந்தக் காலத்தைக் குறித்து ஏசாயா குறிப்பிடுகிறான்.

“திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து. நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம். என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளாக ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை” (ஏசாயா 2:3-4).

சீயோனிலிருந்து வேதம் செல்லக் காரணம் என்னவெனில், இயேசு கிறிஸ்து அங்கிருந்து எருசலேமில் ஆட்சி செய்வார். இதைத்தேவன் பல்லாண்டுகளுக்கு முன் தாவீதுக்கு வெளிப்படுத்தினார். ஏனெனில் இயேசு கிறிஸ்து தாவீதின் சிரேஷ்ட குமாரன் (சந்ததி). அவர் பூமி முழுவதுக்கும் அரசனாக எருசலேமிலிருந்து ஆளுவார். மேலும் அவர் உலக முழுவதிலும் மனுகுலத்தை ஆசீர்வதிக்கிற ஆபிரகாமின் குமாரனாகவும் இருக்கிறார். இவை பூமியில் தேவனுடைய ஆட்சி நிலையாகும் போது உறுதியாகும்.

எனவே, புதிய ஏற்பாடு ஆரம்பிக்கையிலேயே தேவனுடைய உடன்படிக்கையை நினைவூட்டும் வண்ணமாக, “ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனாக இயேசு கிறிஸ்து வினுடைய வம்ச வரலாறு” என்று ஆரம்பிக்கிறது.

**- திரு. டெட்பைர்ட்**



## வேதாகம சத்தியத்திற்கான ஆதாரம்

# பாபிலோனிய சிறையிருப்பு

வேதாகமம் வெறும் புராணம் தான்; அது ஒரு கட்டுக்கதை என ஒருவன் கூற, இன்னொருவன் ஆணித்தரமாக, ‘‘ஆம், ஆம் வேதாகமம் தவறு என நிரூபித்துவிட்டார்கள்’’ என்கிறான். இங்ஙனம் பேசுகிறவர்களுக்கு இன்றைய நாள் வரை நடந்தது என்னவென்று தெரியாது. உண்மை என்னவெனில், விமர்சகர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத வேதாகம சம்பவங்கள் இப்பொழுது துல்லியமான வரலாறு என அறியப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் பாபிலோன் என்னும் நகரம் புராணத்தில் வருவது தான் எனக் கருதப்பட்டது. ஆனால் அகழ்வாராய்ச்சியின் மூலம் பாபிலோன் நகரைக் கண்டு பிடித்துவிட்டனர்.

அப்படி பாபிலோனை அகழ்வாராய்ந்தபோது, அதில் காணப்பட்டவை வேதாகமத்தின் உண்மையை மெய்ப்பித்தன. எடுத்துக்காட்டாக, படத்தில் காட்டப்பட்டுள்ள எழுத்துப் பொறித்த பலகையில் 2 இராஜாக்கள் 24:11-17ல் கூறப்பட்டவை காணப்படுகின்றன.

“ஏழாம் ஆண்டு, கிஸ்லெப் மாதத்தில், பாபிலோன் தேசத்து அரசன் தன் படைகளைத் திரட்டி ஹட்டி நாட்டினுள் புகுந்து யூதா நகரத்தை முற்றுகையிட்டான். ஆதார் மாதத்தின் இரண்டாம் நாளில் நகரைப் பிடித்து அரசனையும் சிறைபிடித்தான். தானே தெரிந்தெடுத்த ஒருவனை அங்கு அரசனாக்கி, வெகு பணத்தைக் கப்பமாக வாங்கி, அதை பாபிலோனுக்கு அனுப்பினான்."

யோயாக்கீன் அரசன் 37 ஆண்டுகள் சிறையில் இருந்தான். அதன் பின் விடுதலையாக்கப்பட்டு நன்கு பராமரிக்கட்பட்டான். (எரேமியா (52:31-34) அவனுக்கும் கொடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் விவரம் கீழை காணப்படும் எழுத்துப் பொறித்த பலகையில் உள்ளது.








# அந்நியன்

நான் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் என் தந்தை ஓர் அந்நியனைச் சந்தித்தார். அந்த அந்நியன் எங்கள் கிராமப்புறத்துக்குப் புதியவன். ஆரம்பத்திலிருந்தே அப்பா இந்தப் புதியவனால் மயங்கி அவன் வசமானார். சீக்கிரத்தில் அவனை எங்கள் குடும்பத்தில் ஒருவனாக எங்களுடன் வசிக்கும்படி அழைத்து வந்தார். இந்த அந்நியன் வெகுசீக்கிரத்தில் எங்களது அங்கீகாரம் பெற்றதுடன், சென்ற சில மாதங்களாக என்னைப் புதிய உலகத்துக்கு அறிமுகப்படுத்தினான். நான் வளர்ந்து வந்தபோது அவன் எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கமாக இருப்பதை ஒருநாளும் தட்டி கேட்கவில்லை.



என் இளம் மனதில் குடும்பத்தின் நபர் ஒவ்வொருவருக்கும் ஓர் இடம் உண்டு. என்னை விட ஐந்து வயது பெரியவனான என் அண்ணன் தான் எனக்கு முன்மாதிரி. என் தங்கையிடம் பெரிய அண்ணனாக நடந்து கொள்ளவும், அவனைக் கேலிசெய்யவும் வாய்ப்பு கிடைத்தது. என் பெற்றோர் ஆசிரியர் இல்லாத குறை நீக்கும் ஆசிரியர்களாக இருந்தனர். அம்மா தேவனுடைய வார்த்தையை நேசிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். அப்பா, அதற்குக் கீழ்ப்படியச் சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால் கதை சொல்பவன் அந்நியன்தான். கவர்ச்சிகரமான தொடர்க்கதைகள் மர்மங்கள் - நகைச் சுவைகள் கலந்தவைகளாக இருந்தன. இவைகள் எங்களின் அன்றாட உரையாடல்களை உறையவைத்து முழுக்குடும்பமும் மணிக்கணக்காகப் பேசாமல் அசையாமல் அமரச் செய்திருந்தது. அரசியல், வரலாறு, அல்லது அறிவியல் பற்றி நான் அறிய விரும்பினால் எல்லாமே அந்த அந்நியனுக்குத் தெரிந்திருந்தது. அவனுக்குக் கடந்த காலம் தெரிந்திருந்தது, நிகழ்காலம் புரிந்தது, எதிர்காலமும் அவனுக்குத் தெரிந்தது போலத் தோன்றியது. அவன் காட்டின படங்கள் வாழ்க்கையில் நடப்பது போலவே இருந்தது. ஆகவே அவைகளைப் பார்த்து அழுவேன் அல்லது சிரிப்பேன். முழுக்குடும்பத்திற்கும் ஒரு நண்பனைப் போலவே இருந்தான். அவன் என்தந்தையையும், அண்ணனையும் என்னையும் முதல்முதலாகப் பெரிய விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் சென்றான். திரைப்படங்களைப் பார்க்கும்படி, எப்போதும் எங்களை உற்சாகப் படுத்தியதோடல்லாமல், திரைப்பட



நடிகர்களையும் எங்களுக்கு அறிமுகம் செய்தான். என் அண்ணனுக்கும் எனக்கும் ஒரு குறிப்பிட்ட நடிகரை ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. அந்நியன் எப்போதும் பேசிக் கொண்டே இருப்பான். அப்பா அதை அதிகம் பொருட்படுத்துவதில்லை. ஆனால், நாங்களெல்லாரும் எங்கேயோ நடந்த ஒரு கதையை அவன் கூறுவதை மெய்மறந்து கேட்டுக்கொண்டிருக்கையில், அம்மா மட்டும் அமைதியாக எழுந்து தன் அறைக்குப் போய் தன் வேதாகமத்தை வாசித்து ஜெபம் செய்வார்கள்.

அந்நியன் எங்களை விட்டுப் போய் விட வேண்டும் என்று அம்மா எப்போதாவது ஜெபித்திருப்பார்களோ என இப்போது எண்ணுகிறேன். சில சன்மார்க்க நெறிகளைக் குடும்பத்தில் கடைப்பிடிக்கும்படி அப்பா கவனமாய்ப் பார்த்துக் கொண்டார். நாங்களோ, எங்கள் நண்பர்களோ, பெரியவர்களோ யாருமே கெட்ட வார்த்தைகளைப் பேச அவர் அனுமதிக்க மாட்டார். எங்கள் நீண்டகால விருந்தினரோ சில சமயங்களில் பயன் படுத்திய வார்த்தைகள் என் காதில் சுவாரசியமாய் ஒலித்தன. அப்பாவோ சகிக்கமுடியாது நெளிந்தார். எனக்குத் தெரிந்தவரை அந்நியனை யாரும் எதிர்க்கவில்லை. என் அப்பாவுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. சமையலுக்குக் கூட மதுவை வீட்டுக்குள் அனுமதிக்கமாட்டார். ஆனால் அந்நியனோ எங்களுக்கு எல்லாம் தெரியவேண்டுமென்று வேறுவிதமான வாழ்க்கை முறைகளைப் பற்றிய அறிவைக் கொடுத்தான். பீர் மற்றும் மதுவகைகளை அறிமுகப்படுத்தினான். சிகரெட் ருசியாயிருப்பது போலவும், சுருட்டு குடிப்பது ஆண்களுக்கு அழகு என்பது போலவும் காட்சி காட்டினான்.

பாலுறவு பற்றி ரொம்ப தாராளமாகவே பேசினான். அவன் பேச்சு சில வேளைகளில் மோசமாய் பச்சையாகவே இருந்தது. சில சமயங்களில் செயலுக்குத் தூண்டுவது போல் இருந்தது. மொத்தத்தில் சங்கடமாகவே இருந்தது. ஆண்-பெண் உறவு பற்றிய என் ஆரம்ப கால கருத்துகள் எங்கள் வீட்டு அந்நியனாலேயே பாதிக்கப்பட்டன.

நான் திரும்பிப் பார்க்கிறேன், தேவனுடைய கிருபையால் தான் அந்நியனால் மேலும் எங்களைப் பாதிக்க முடிய வில்லை என நம்புகிறேன். என் பெற்றோரின் மதிப்பீடுகளை அவன் திரும்பத் திரும்ப எதிர்த்து வந்தான். இருப்பினும் அவன் ஒருபோதும் கடிந்து கொள்ளப்படவில்லை, வீட்டை விட்டுப் போகும்படி யாரும் சொல்லவுமில்லை. இந்தச் சின்னக் குடும்பத்திற்குள் அந்நியன் வந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆரம்ப ஆண்டுகளிலிருந்தது போல அப்பாவிற்கு அவன் அவ்வளவு கவர்ச்சிகரமாயில்லை. ஆனால் என் அப்பா வீட்டிற்கு நான் போனால், அந்த அந்நியன் யாராவது தன் பேச்சைக்கேட்க மாட்டார்களா, தன் படங்களை யாராவது பார்க்க மாட்டார்களா என ஒரு முலையில் காத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்.

அவன் பெயர்? எப்போதுமே அவனை டி.வி. என்று தான் அழைத்தோம்.

**உதவி: பில் லிங்க் சீனியர்**
**ஆதாரம்: தெரியவில்லை.**

# சீரியனாகிய நாகமானின் அறிக்கையும் குணமாகுதலும்

பிலிப்புவின் குடும்பம் மாலைதியானத்துக்கென்று 2.ராஜாக்கள் 5-ம் அதிகாரத்தை வாசித்து,அதிலுள்ள கதையை விவரிக்க ஆரம்பித்தனர்.

வழக்கம்போல பிலிப்பு பேச ஆரம்பித்தார். “இது மிகவும் அற்புதமான அதிகாரம். அதை வாசிக்கும்போது கேட்க நன்றாக இருக்கிறது. அதிலும் மேலாக, ஆவிக்குரிய பாட புதைந்திருக்கிறது. ஒருவன் இரட்சிப்பு அடையும்படிக்கு என் செய்யவேண்டும் என்று மிகவும் வெளிப்படையாகச் சொல்வதுடன் கர்த்தராகிய இயேசுவின் கிரியைக்கு ஒப்பனையாக இது இருப்பதைக் காட்டுகிறது.”



“அது எந்த வகையில் இயேசுகிறிஸ்துவின் கிரியையை வெளிப்படுத்துகிறது?” என்று பீட்டர் கேட்டான்.

அதற்குள் அவன் தகப்பனார், “இயேசுதாமே இந்த சம்பவம் குறித்து லூக்கா 4:25-27ல் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். “அந்நாட்களில் இஸ்ரவேலில் திரளான குஷ்டரோகிகள் இருந்தனர், ஆனால் அந்த ஒரே புறஜாதியானைத்தவிர வேறுயாரும் குணமாக்கப் படவில்லை," என்றார். அவர் அந்தச் சம்பவத்தை விளக்கின விதமானது, யூதரல்லாத புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் முறையை அவர் கையாட விரும்பியதைக் குறிக்கிறது. நாம் இந்தக் கதையில் வருகிற வெவ்வெறு ஜனங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதைக் கீழ்க்கண்ட பட்டியலில் எழுதியுள்ளேன்: பாருங்கள்”என்று தான் எழுதி வைத்திருந்த பெயர் பட்டியலைத் தகப்பனார் எடுத்துக் காண்பித்தார்.



நாகமான்: பின்வரும் வழிகளில் நமது முன் நிறுத்தப்படுகிறான்

- சக மனிதர்களால் உயர்வாக மதிக்கப் படுகிற ஒரு புறஜாதியான்.
- அறிவிக்கப்பட்ட ஒரு குஷ்டரோகி [தனது பாவத்தை மூட முயற்சிக்கிற ஒரு தேவையுள்ள பாவிக்குச் சமம்].
- கடவுளின் உதவியை நாடுகிறவன், ஆனால் தனக்குள்ளே கற்பனை வளர்த்துக்கொண்டவன்[வச:11].
- சுய அறிவினாலே தாழ்த்தப்பட்டவன்[வச:15].
- மன்னிக்கப்பட்ட பாவி[வச:18].

**இஸ்ரவேலின் ஊழியக்காரி காட்டுவது:**

- சுவிசேஷம் அறிவிக்கிற தாழ்மையுள்ள பாத்திரம்.
- இரட்சிப்பின் வழியைத் தைரியமாகச் சுட்டிக் காட்டுகிற ஒரு வக்கீல்/மத்தியஸ்தர்.

**கேயாசி நினைவு படுத்துவது:**

- நியாயப் பிரமாணத்தை நம்பியிருக்கிற யூத பிரமாணிகன்
- பிறருக்கு நற்செய்தி அறிவிப்பதை வெறுக்கிறவன்.

**எலிசா: இயேசு கிறிஸ்துவை முன்குறிக்கிறான்.**

தேவையானோருக்கு ஆலோசனை மற்றும் வழி நடத்துதலை அளிக்கிறான். மரணத்திலிருந்து விடுவித்து ஜீவன் கொடுக்க வல்லவரைச் சுட்டிக் காட்டுகிறான்.

“இப்போது சுருக்கமாக நாகமானின் கதையைத் திரும்பக் கவனிப்போம்”என்று பிலிப்பு கூறினார்.

தனது சகோதரிகளைக் கோபப்படுத்தும் விதமாகப் பீட்டர் கேட்டான், “சுருக்கமாக என்றால் எவ்வளவு நேரத்துக்கு?” என்று கிண்டலாகக் கேட்டான்.

அனாவசியமான இந்த குறுக்குக் கேள்வியைப் பொருட்படுத்தாமல் பிலிப்பு பேசத் தொடர்ந்தார்.”முதன்முதலாக இஸ்ரவேல் ராஜாவின் இக்கட்டுக்கு என்ன காரணம் என்பதைக் கவனிப்போம்[வச:1-7]. நாம் கவனிக்காமல் கடந்துபோகக்கூடிய ஒரு பாத்திரமாக நாகமான் இருக்கவில்லை. சீரியா தேசத்தின் படைத்தலைவனாகவும் இஸ்ரவேல் ராஜாவைப் பயப்படுத்தக் கூடிய ராஜாவினிடத்திலும், அவனுடைய பெயரின் அர்த்தத்துக்கு ஏற்றவிதமாய், “அழகும் சாதுரியவானுமாய்” இருந்தான்.

“எனினும் அவனுக்கு இருந்த பயங்கர நோயைக் குறித்து, "மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்” என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

“இதன் அர்த்தத்தை முழுவதுமாகப் புரிந்துக் கொள்ள வேண்டுமாயின், இந்த அத்தியாயம் முழுவதின் தார்ப்பரியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். மோசேயின் நியாயப் பிரமாணம்[லேவியராகமம்:13] குஷ்டரோகத்தை ஆவிக்குரிய முக்கியத்துவம் கொடுத்து குறிப்பிட்டுள்ளது. குணமாகக் கூடாத குஷ்டரோகிகள் பாளயத்துக்குப் புறம்பே தள்ளப்பட்டனர். இஸ்ரவேலர் மத்தியில் குஷ்டரோக வியாதி பாவத்துக்குச் சமமான அடையாளமாக இருந்தது.

“ஆனால் யூதரல்லாதவர்கள் குஷ்டரோகத்தை இஸ்ரவேலரின் கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. அதற்குக் காரணம் இஸ்ரவேலரைப் போல நியாயப் பிரமாணத்தின்கீழ் அவர்கள் கட்டுப்படாததால் பாவத்தின் அகோரத்தைக் குறித்துச் சிந்திக்கவில்லை.அவர்களைப் பொருத்த மட்டில் குஷ்டரோகமானது வசதியின்மை தருவதுடன் ஜீவனுக்கு ஆபத்தை விளைவிப்பதே ஒழிய அதை ஒரு கேவலமாக அவர்கள் கருதவில்லை. ஒரு யூதனுக்குக் குஷ்டரோகம் வந்துவிட்டால் அது அவனை அவனது சொந்த ஜனத்திடமிருந்து பிரித்து வைத்தபடியால் எப்படியாவது அதிலிருந்து சுகம் பெற முயற்சிப்பான்.யூதனல்லாதவனுக்குக் குஷ்டரோகம் வந்தால் தனக்கு மரணம் வருமே என்ற பயத்தினால் சுகம்பெற முயற்சிப்பான். அதேவிதமாக பாவத்தைக் குறித்த கண்ணோட்டம் ‘சத்தியதத்திற்குள்’ இருப்பவர்களுக்குள்ளும், ‘சத்தியத்துக்குப் புறம்பே’ இருப்பவர்களுக்குள்ளும் மாறி மாறி காணப்படுகிறது. பாவத்தை மீறுதலாகக் கைக்கொண்டு நடக்கிறவன் தன் சகோதரரிடமிருந்து பிரிக்கப்பட்டு,நியாயப்பிரமாணத்தைச் சந்திக்க நேரிடும் என்று முந்தினவன் அறிந்திருக்கிறான். ஆனால் பிந்தினவனோ அதன் பின்விளைவை மனதில் கொண்டு பாவமும் மரணமும் குறித்துப் பயப்படுகிறான்.

“இங்கு நாகமான் அதிர்ஷ்டசாலியாக இருந்தான். எதாச்சாதிகாரமாக, கர்த்தருடைய பார்வையில் நாகமான் அருள் பெற்று அவனில் ‘அழகும் சாதுரியமும்’ இருந்தது. ஏனெனில் அவனது ஜீவியத்தின் சூழ்நிலைகளுக்கு அப்பால், அவன் சரீரத்திலிருந்த பயங்கர நோயிலிருந்து இரட்சிப்பை அருளும்படி தேவன் சித்தங்கொண்டார்.

இஸ்ரவேலின் பணிப்பெண் சுவிசேஷம் அறிவித்தல் :

அக்கால கட்டத்தில் இஸ்ரவேலருக்கும் சீரியருக்கும் நடுவே யுத்தம் நடவாதிருந்தும், வட இஸ்ரவேல் பகுதியைச் சீரிய படைகள் அவ்வப்போது சீண்டிக் கொண்டிருந்தன. எல்லைப் பகுதி கிராமங்களைத் திடீரெனத் தாக்கி கொள்ளையடித்து வந்தனர்.

அப்படிப்பட்ட ஒரு தாக்குதலில் இஸ்ரவேலரின் யுவதி ஒருத்தியை சீரியர் பிடித்துக் கொண்டுபோய், நாளாவட்டத்தில் அவள் நாகமானின் வீட்டில் அடிமை பெண்ணானாள். அவள் நாகமானின் மனைவிக்குப் பணிப்பெண்ணாக இருந்தாள். சீரிய படைத் தலைவனுடைய கனிவான நடத்தை இளம் பணிப் பெண்ணின் மனதில் இரக்கத்தை வளர்த்தது. நாகமானின் மனைவிக்கும் இஸ்ரவேலின் அடிமைப் பெண்ணுக்கும்



நடுவில் சிநேகம் வளர்ந்தது. இஸ்ரவேலின் பணிப்பெண் மனதில் தனது எஜமாட்டியின் கணவரின் சரீரத்தில் காணப்பட்ட குஷ்டரோகத்தின் அறிகுறிகள் கோரமாகக் காட்சியளித்தன.

அவள் ஒரு நாள் நாகமானின் மனைவியிடம் மனந்திறந்து பேசினாள்: “எனது மதிப்புகுரியா உங்கள் எஜமா€ சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசியிடம் சென்றால் நலமாயிருக்கும். அவர் அவருடைய குஷ்டரோகத்தைக் குணமாக்குவார்” என்றாள்.



“எந்; அதிகாரத்தின் பேரில் அவள் அப்படி பேசியிருக்கக் கூடும்?” என்று ராஜன் குறுக்கிட்டான்; “இதற்கு முன்னால் நீங்கள் காட்டின [லூக்கா 4:27] வேதவாக்கியத்தில்,

“எலிசாவின் காலத்தில் இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் [குணமாகாமல்] இருந்தார்கள்” என்று எழுதப்பட்டிருக்கையில், இஸ்ரவேலின் அடிமைப்பெண் எவ்வாறு துணிகரமாக, ‘நாகமானை எலிசா குணப்படுத்துவார்’ என்று கூறினது ஆபத்துக்குரிய பேச்சு அல்லவா?” என்று கேட்டான்.

அதற்குப் பதிலாக தகப்பன் கூறினார்: “வாஸ்தவந்தான். நிச்சயமாக அக்காலத்தில் இஸ்ரவேலருக்குள்ளே குஷ்டரோகிகள் காணப்பட்டார்கள். உண்மையில் 2. ராஜாக்கள் 7:1-3ல் சமாரியாவின் வாசலில் சில குஷ்டரோகிகள் வந்தது பற்றி குறிப்பிடுகிறது. அந்தப் பணிப் பெண் பேசுகையில் கர்த்தரால் ஏவப்பட்டு பேசினாள் என்று நிச்சயமாகக் கூறமுடியும். அவளுடைய தனிப்பட்ட சூழ்நிலை அனைத்திலும் கர்த்தர் அவளைப் பாதுகாத்திருந்தார். அவள் சிறைப்பட்டு போனாள் என்று முதலில் அவள் குடும்பத்தார் கேள்விபட்டவுடன் மிகவும் வருத்தப்பட்டு துவண்டு போயிருக்கக் கூடும். ஆயினும் வேதவசனம் சங்கீதம் 34ல் கூறுகிறது: “கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை•விடுவிக்கிறார் [வச.7].

பவுல் கூறுகிறார், “அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்க...ளுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக

நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” [ரோமர் 8:28]. ஆதலால் அவள் கர்த்தருடைய கரத்தில் தாழ்மையான கருவியாக “தேவனுடைய நன்மையை “ அறிவித்தாள். இன்றைய திருச்சபையின் கடமையும் இதுவே. அது கிறிஸ்துவுக்குள் கற்புள்ள கன்னிகை [2.கொரிந்தியர் 11:2] யாக அறைகூவ வேண்டும்.

“அந்தப் பணிப்பெண் திடச்சித்த நிச்சயமாகக் கூறின வார்த்தை சீரியா அரசாங்கத்தை அசைத் தது. இஸ்ரவேலின் நடுவே நடந்த அற்புதங்களைச் சீரியர் முன்னே கேட் டிருந்தார்கள். அடிமைப் பெண் கூறின வார்த் தையை நம்பும்படி கட்டாயமான சூழ் நிலைக்குத் தள்ளப் பட்டனர். அவள் கூறின வார்த்தை சீரியா ராஜா வாகிய பெனாதாத்தைப் போய் எட்டினது. உடனே தனது மதிப்பிற்குரிய படைத்தலைவனான நாகமானுக்கு உதவ முற்பட்டான். தான் கேள்விப்பட்ட அற்புதத்தை நிறைவேற்றும்படி இஸ்ரவேலின் அரசனாகிய யோராம் என்பவனிடம் ஆள் அனுப்பி கட்டளையிட முயன்றான். ஒரு விலையுயர்ந்த பரிசை ஈவாக கூடவே அனுப்பிவைத்தான். பெனாதாத் ராஜா மிகுந்த நம்பிக்கையுடன் தீர்க்கதரிசியின் வரவை எதிர்நோக்கியிருந்தான்.சீரியா தேசத்து குடிமக்களிடம் கொடுங்கோலாட்சி நடத்தி வந்த பெனாதாத் ராஜா தீர்க்கதரிசியையும் தன்னுடைய ஆட்சிக்குட்பட்டவன் என்று தவறாகக் கருதிவிட்டான். அவனுக்குத் தெரியாதிருந்த விஷயம் என்னவெனில், தீர்க்கதரிசியானவன் கர்த்தராகிய யெகோவாவின் உன்னத ஊழியன்; அவன் பெனாதாத் அல்லது யோராமுக்குக் கீழ்ப்பட்டவனல்ல என்று புரிந்துகொள்ள வில்லை.

“ஏற்றவேளையில் ஸ்தானாதிபதி தன்னுடன் அனுப்பப்பட்ட வேலைக்காரர் மற்றும் நாகமானுடன் சமாரியா அரண்மனை வந்து சேர்ந்தனர்.

அப்படிப்பட்ட ஒரு வரவைக்குறித்து இஸ்ரவேல் அரசன் குழப்பமடைந்தான். ஆனால் அவனுடைய குழப்பம் சீக்கிரத்தில் திகிலாகவும் பயமாகவும் மாறியது.ஏனெனில் அவன் பெனாதாத் ராஜாவிடமிருந்து பெற்ற கடிதம்தான்:

“இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான். நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்.”

“என்ன அபத்தமான வேண்டுகோள்! நாகமானை குஷ்டரோகத்திலிருந்து குணமாக்க யோராம் அரசனால் எப்படி முடியும்?அரசன் கடிதத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள, காரணத்தை ஆராய்ந்தபின் ஒரு முடிவுக்கு வந்தான். பெனாதாத் ராஜா சண்டைக்கு அவனை இழுக்கத் திட்டமிட்டுள்ளான். இந்தக் கடிதம் யுத்தத்துக்கு அழைக்கிறது! பயத்துடன், இஸ்ரவேல் சீரியாவுடன் யுத்தத்துக்குச் செல்ல தயாராக இல்லாத நிலையில், என்ன செய்வதென்று அரசன் குழப்பமடைந்தான். மனம்நொந்து அவன் தன் வஸ்திரத்தைக் கிழித்து, “ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கும்,கொல்லவும்



உயிர்ப்பிக்கிறதற்கும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்” என்றான்.

யோராம் அரசன் தனது பிரச்சனையின் நடுவில் கர்த்தரின் உதவியை நாட மறந்துப் போனான்.

ஆனால் எலிசா அரசனின் நிலைமையைக் கேள்விப்பட்டான். அவன் அரசனிடம், “நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? அந்த நாகமான் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும்”என்று சொல்லியனுப்பினான்.

அந்த இளம் அடிமைப் பெண் புறதேசத்திலிருந்து, அந்த சமயத்தில் இஸ்ரவேலை அரசாண்டவனைக் காட்டிலும் பெரிய விசுவாசத்தைக் காண்பித்தாள்.

நாகமானின் காரணமற்ற குணம் [வச.8-12]

பிலிப்பு இன்னும் தொடர்ந்து பேசினார், “இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில், அரசனின் குழப்பமான சூழ்நிலை பற்றி கண்டோம். இப்போது நாகமானின் காரணமற்ற குணத்தைப் பற்றி பார்ப்போம். அவன் குஷ்டரோகம் நீங்கும்படி எலிசாவிடம் அனுப்பப்படுகிறான். அவ்வாறு போகையில் தனக்கு எவ்வாறு நடக்கவேண்டும் என்று ஏற்கனவே கற்பனை செய்தவனாகச் செல்கின்றான். அந்த வழியில் இன்றுள்ள அநேகரைப்போன்று அவன் காணப்படுகிறான்.”

“நீங்கள் சொல்லுகிறதைப் புரியும்படி சொல்லுங்கள்” என்று வசந்தி கேட்டாள்.

“அடிக்கடி இயேசு கிறிஸ்துவிடம் வருகிறவர்கள் தங்கள் நாட்டத்துடன் கற்பனை செய்கிறவர்களாக வருகின்றனர். கடவுளிடம் தங்களை முழுவதுமாக அர்ப்பணியாமல், தங்களுடைய நிபந்தனையைக் கடவுள் நிறைவேற்றும்படி எதிர்பார்த்து வருகிறார்கள், அதில் அவர்கள் நாகமானைப் போல் செயல்படுகிறார்கள்,” என்று தகப்பனார் கூறினார்.

ராஜன் இடைமறித்து, “அதை நாகமானில் என்னால் காணமுடியவில்லை” என்றான்.

பீட்டர் அவனிடம், “ராஜன் சற்று பொறுமையாயிரு, அப்பா ஒவ்வொன்றாக விளக்கி சொல்ல நேரம் ஆகும். அவசரப்படாதே” என்றான்.

“நீங்கள் ஒரேயடியாக அப்பாவுக்குச் சாதகமாக, சகோதரனைத் தாழ்த்துகிறீர்களே” என்று வசந்தி கோபித்துக்கொண்டாள்.

“பிள்ளைகளே, அது போதும், உங்களுக்குள் வாதம் வளர்ப்பதால் அம்மா வேதனைப் படுவார்கள். கதையின் இந்த பகுதியை நீங்கள் தவறவிட நான் விரும்பவில்லை. ஆதலால் கவனியுங்கள்,” என்றுக் கூறி தகப்பனார் தொடர்ந்தார். “நாகமான் ஒரிரண்டு தவறுகள் செய்தான். முதலாவதாக, அவன் அரசன் மற்றும் தீர்க்கதரிசியிடம் தனது அதிகாரம் மற்றும் படாடோபம் காட்ட முயன்றான். நாம் 9-ம் வசனம் படித்தால்

அது புரியும்; “நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.” ஒரு குஷ்டரோகி இப்படிப்பட்ட ஒரு பந்தா காண்பித்து, தீர்க்கதரிசியிடம் வந்து நிற்பது மாயையாகவே தெரிகிறது. அவன் குஷ்டம் நீங்க வந்தபடியால் ஒரு குஷ்டரோகி என்ற நிலையில் தாழ்மையுடன் வரவேண்டியதாக இருந்தது. இரண்டாவதாக, தான்



குணமாக என்ன வழி கடைப்பிடிக்க வேண்டும் என்ற கற்பனையோடு அவன் வந்தது ஒரு தவறாக இருந்தது. எலிசா தன் முன் வழிபாடு முறையில் வந்து நின்று, கர்த்தருடைய நாமத்தில் ஜெபம் செய்து , தனது கரங்களால் பாதிக்கப்பட்ட அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய் குணப்படுத்துவான் என்று கற்பனை மற்றும் எதிர்பார்ப்போடு வந்திருந்தான்.”

“அவன் அப்படி நினைத்தது உங்களுக்கு எப்படி தெரியும்?” என்று பீட்டர் கேட்டான்.

“வசனம் 11-ல் அது எழுதியிருக்கிறதே” என்று வசந்தி சட்டென்று பதிலளித்தாள்.

“ஆதலால் நாகமான் ஏற்கனவே செய்திருந்த கற்பனையோடு, கடவுளின் தீர்க்கதரிசி மூலமாக என்ன செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வந்திருந்தான். அநேகர் இயேசு கிறிஸ்துவிடம் வருகையில் தங்களது கற்பனை நிறைந்த சிந்தனைகளோடு எதிர்பார்த்துவருவதால், அவரது கற்பனைகளுக்குச் செவிகொடுத்து கீழ்ப்படிய ஆயத்தமில்லாமல் வருகின்றனர். அவரை முழு இருதயத்தோடு விசுவாசிப்பது அவசியம் என்று அவர்கள் எண்ணுகிறதில்லை. மேலும் ஞானஸ்நானம் சிறுபிள்ளைத்தனமான ஒரு ஆச்சாரம் அல்லது சடங்கு. ஏற்கனவே குழந்தைகளாக இருக்கையிலே தங்கள்மேல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் கொடுத்து விட்டதால் வேறொன்றையும் செய்ய அவசியமில்லை என்றெண்ணுகின்றனர்.



சுருங்கக் கூறின், அவர்களும் நாகமானைப் போல நடந்து கொள்ளுகிறார்கள்.

“நாகமானிடம், “நீ போய் யோர்தானில் ஏழுதரம் முழுகி ஸ்நானம் செய்’ என்று தீர்க்கதரிசி சொல்லியனுப்பியதை ஒரு கேவலமாக தன்னை அசட்டை செய்ததாக எண்ணிவிட்டான். “தமஸ்குவின் நதிகளைப் பார்க்கிலும் இஸ்ரவேலின் நதிகள் மேலானவைகளா?” என்று கொக்கரித்தான்.

“ஆதலால் தனது சொந்த ஜனத்தின் பெருமையும், அவனது கற்பனையான எண்ணங்களும் அவன் கீழ்ப்படியக் கூடாதபடிக்குத் தடுத்து நிறுத்தியது. இப்படியே இன்னும் மக்கள் மத்தியில் நடக்கிறதே” என்றார் பிலிப்பு.

நாகமான் ஞானஸ்நானத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கிறான்.

“நாகமான் கூட்டத்தில் ஒருவன் சமயோசித புத்தி யுள்ளவனும் தாழ்மை யுள்ளவனுமாக இருந்தான். சீரியபடைத் தலைவனிடம், “தலைவனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியி ருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ‘ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் ‘ என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம்” என்றான்.

“இது அருமையான ஆலோசனை. நாகமான் நன்றாகச் சிந்திக்கிறவனாகையால் அதற்குக் கீழ்ப்படிந்தான். அவனுடன் சேர்ந்திருந்த சிறு கூட்டத்துடன் அவன் யோர்தான் நதிக்கு சென்று, அதில் ஞானஸ்நானம் எடுத்து கொண்டான். ஆறு முறை அவன் நீரில் மூழ்கி எழுந்தும் எதுவும் நடக்கவில்லை. ஏழாம் முறை மூழ்கி எழுந்தவுடன் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அவன் சரீரம் மாற்றமடைந்தது. குஷ்டரோகம் நீங்கிற்று!

“நீருக்குள் இறங்கின அதே மனுஷன் இப்போது புதிய மனிதனாக மாற்றம் பெற்று வெளியே வந்தான்! மிகுந்த களிப்போடும் உற்சாகத்தோடும் அவன் எலிசாவின் வீட்டிற்கு வந்தான். அவன் நின்று, “இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்” என்று அறிக்கை செய்தான்.

“இது அவனுடைய விசுவாச அறிக்கை.அவன் இஸ்ரவேலின் நம்பிக்கையில் இப்பொழுது விசுவாசம் வைத்தான். தனது மகா சந்தோஷம் பூரிப்பில் தீர்க்கதரிசிக்கு வெகுமதி கொடுக்க விரும்பினான். ஆனால் எலிசா ஒன்றையும் ஏற்கவில்லை. நாகமான் தன்னோடு தேசத்தின் உச்சிதமான விலையுயர்ந்த பல வெகுமதிகளை எடுத்துக்கொண்டு [வசனம் 5 காண்க] வந்தாலும் அவற்றைவிட, எலிசா கொடுத்த மிகப்பெரிய சொத்து விலையுயர்ந்ததாக இருந்தது."